தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-
மலர் 26
இதழ் 07
நவம்பர் 2024

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு

வங்கிக் கடன்

இணைப்புகள் வழங்குதல்

ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

வாழ்த்துரை

சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள அன்பு சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் என் அன்பு வணக்கங்கள்!!!

“பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும்” என்பதற்கு எடுத்துக்காட்டாக மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் உள்ளது. சாதாரண ஏழை எளிய பெண்கள் கூட சுய உதவிக் குழு இயக்கத்தில் இணைந்து, இன்று தொழில் முனைவோராக சாதித்து வருகின்றனர் என்பது சுய உதவிக் குழு இயக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

சுய உதவிக் குழு இயக்கத்தின் மீது அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், அவற்றின் செயல்பாடுகளை கண்காணித்தும் வருகின்றனர்.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் ஆகியவற்றிற்கு மணிமேகலை விருதுகளையும், நகர்ப்புர சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளையும், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகளையும் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தனது உரையில், “துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு தான் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சியே சுய உதவிக் குழுக்களுக்கானதுதான்” என்று குறிப்பிட்டது நமக்கெல்லாம் பெருமை தரும் ஒன்றாகும்.

ஊக்கத்துடன் உழைத்தால் வெற்றியும், பெருமையும் வந்து சேரும் என்பதை பறைசாற்றும்

“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை”.

என்ற குறள் வரிகளுக்கேற்ப ஊக்கமுடன் உழைக்கும் சுய உதவிக் குழுவினரான உங்களை பெருமையும் சிறப்பும் தேடி வரும் என்பது திண்ணம். எனவே, எத்துணை தடை வரினும் அதை தகர்த்து நீங்கள் வெற்றி நடை போட வேண்டும். உங்களுக்கு என்றும் நம் அரசும், நம் நிறுவனமும் துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம் !!!

அன்புடன்,

(ககன்தீப் சிங் பேடி)

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

சாதனைகள் பல படைத்து வரும் சுய உதவிக் குழு சகோதரிகள் அனைவருக்கும் என் இனிய வணக்கங்கள்.

“ஒன்றே செய்... நன்றே செய்... அதுவும் இன்றே செய்...” என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றி வரும் உங்களை முற்றம் இதழின் வாயிலாக மாதந்தோறும் சந்தித்து, எனது கருத்துகளை பகிர்ந்து கொள்வது எனக்கு பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

சுய உதவிக் குழுக்களில் இணைந்துள்ள ஏழை எளிய பெண்களை தொழில் முனைவோராக உருவாக்கி, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் உன்னத பணியில் ஈடுபட்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்று வருகிறது என்பது நமக்கெல்லாம் பெருமையாகும்.

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை பரந்து பட்ட அளவில் விற்பனை செய்திட மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக நகர்ப்புறங்களில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை வாங்கும் வகையில் “அபார்ட்மெண்ட் பஜார்”, தீபாவளி சிறப்பு இயற்கை சந்தை மற்றும் “மதி தீபாவளி பரிசு பெட்டகம்” போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பலனாக, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் அளவிற்கு சந்தை வாய்ப்புகளைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் மக்கள் நலம் நாடும் அரசில் மாண்புமிகு துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடன், பல்வேறு பணிகளுக்குகிடையேயும், நமக்கு முக்கியத்துவம் தந்து, முதல் நிகழ்ச்சியாக நமது சுய உதவிக் குழுக்களுக்கும் கூட்டமைப்புகளுக்கும் மணிமேகலை விருதுகளையும், சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்புகளை வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட வங்கிகளுக்கு சிறந்த வங்கியாளர் விருதுகளையும், நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளையும் வழங்கி நமக்கெல்லாம் பெருமை சேர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு நமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

மாதந்தோறும் உங்களின் செயல்பாடுகளையும், நீங்கள் பெற்று வரும் வெற்றிகளையும் காணும்போது, பாரதியின் ‘புதுமைப் பெண்களாக’, பாரதிதாசனின் ‘குடும்ப விளக்காய்’ சுய உதவிக் குழு மகளிர் வளர்ச்சி பெற்று வருகின்றனர் என்பதை நினைந்து நான் மனம் மகிழ்கிறேன். உங்களுக்கு என்றும் பக்கபலமாய் நம் அரசும், நம் நிறுவனமும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

என் அன்பார்ந்த சுய உதவிக் குழு சகோதரிகளே,

சாதனைகள் பல படைத்து, பெண்களின் முன்னேற்றத்திற்கு கட்டியம் கூறி வரும் உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம். மாதந்தோறும் உங்களை முற்றத்தின் வாயிலாக சந்தித்து எனது எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியை தரும் நிகழ்வாக உள்ளது.

“ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்” என்ற முண்டாசுக் கவி பாரதியின் கூற்றிற்கேற்ப, சுய உதவிக் குழு இயக்கத்தில் இணைந்த பெண்கள் ஆண்களுக்கு நிகராக மட்டுமின்றி அவர்களை விட அதிகமாக சாதித்து வருகின்றனர். பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர் என்றால் அது மிகையில்லை.

அரசின் எந்தவொரு திட்டமும் வெற்றி பெற வேண்டும் என்றால் அந்தத் திட்டம் முறையாக உரியவர்களுக்கு சென்று சேர வேண்டும். அதனால் அவர்கள் பயன் பெற வேண்டும். நமது சுய உதவிக் குழு இயக்கம் இன்று பெற்றுள்ள வெற்றி உங்களின் செயல்பாடுகளினால் கிடைத்தது என்பது அனைவரும் அறிந்ததுதான்.

நம்முடைய வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் வகையிலும், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு அங்கீகாரம் அளித்திடும் விதமாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், மணிமேகலை விருதுகளை வழங்கி வருவது விருது பெற்றவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் பெருமைதான். இது மட்டுமின்றி சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்புகளை வழங்கி வரும் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட விருதுகளும் நமக்கு பெருமை தருவதாக உள்ளன. நல்ல பல திட்டங்களை நம்முடைய வளர்ச்சிக்காக செயல்படுத்தி வரும் நம் அரசுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கி விட்டது. அரசும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாகவும், சிறப்பாகவும் செய்து அனைவரின் பாராட்டுகளையும் பெற்று வருகிறது. நாமும் “நீரின்றி அமையாது உலகு” என்ற வள்ளுவரின் குறள் மொழிக்கேற்ப, மழை நீரை முறையாக சேமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் மழைக்காலத்தில் வரும் நோய்களைத் தடுத்திடவும், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திடவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிட வேண்டும்.

வெற்றிகள் பல பெற்று வரும் உங்களின் சாதனைப் பயணத்திற்கு தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் என்றும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக்குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக்குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்..”

குறளும் – பொருளும்

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

– (குறள்: 215)

பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

உள்ளே...

7 நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

15 மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு

8 மக்கள் நலம் நாடும் அரசின் மகத்தான செயல்பாடுகள்

33 உடல் நலம் காப்போம்

11 வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குதல்

34 சமைப்போம்... சுவைப்போம்

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

விலை ரூ. 20/- • மலர் 26 • இதழ் 07 • நவம்பர் 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். தெய்வநாயகி,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி,** DRO / பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

இந்திய அரசு அமைப்பு நாள்

அன்புள்ள வாசகர்களுக்கு,

பெண்களின் உரிமை பயணத்திற்கு வலுசேர்க்கும் வகையில் பெண்களுக்கென பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், அவர்களின் பாதுகாப்பிற்காக கடுமையான சட்டங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அறிவித்து வருவது பாராட்டிற்குரியதும், இவைகள் பெண்களிடையே மிகுந்த நம்பிக்கையை கொடுத்து வருகிறதும், இந்திய அரசியல் சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள சமத்துவத்தை அனைவரும் அடைவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் உறுதுணையாக உள்ளதும்.

ஒவ்வொரு நவம்பர் மாதமும் இந்திய அரசு அமைப்பு நாளை அனுசரித்து வருகின்றோம். நம்நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பல்வேறு மன்னர்கள், முகலாயர்கள், போர்ச்சுகீசியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் என பல்வேறு தரப்பினர் ஆட்சி செய்து வந்தனர். அப்படி ஆட்சி செய்தவர்கள் அவரவர்களின் நம்பிக்கையையும், தத்துவத்தையும் கையில் எடுத்து அதற்கேற்ப சட்டங்களையும், திட்டங்களையும் தீட்டி செயல்படுத்தி வந்தனர். இவ்வாறாக ஆட்சி செய்ததில் அனைத்து மனிதர்களும் சமத்துவமாக நடத்தப்பட்டு வந்தனரா? என்பது கேள்விக்குறிதான்.

ஆனால், சுதந்திரத்திற்கு பிறகு இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில் "இந்திய அரசு அமைப்பு நாளை" அனுசரித்து வருகின்றோம். அரசியல் சாசனத்தின் முகவுரையில் குறிப்பிட்டுள்ள நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இவை யாவும் அனைத்து குடிமக்களுக்கும் கிடைப்பதற்கு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே.

பல்வேறு பழக்க வழக்கங்களையும், கலாச்சாரங்களையும் கொண்ட நமது நாட்டில், இந்திய அரசியல் சாசனத்தை மட்டுமே கடைபிடித்து ஆட்சி செய்யும் பொழுது அனைவருக்கும் நீதியும், உரிமையும் மற்றும் சுதந்திரமும் சமமாக கிடைக்கும். எனவே, அனைத்து மனிதர்களும் குறிப்பாக, ஆணும் பெண்ணும் சட்டத்திற்கு முன் சமமே.

இப்படிக்கு,



(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 22.10.2024 அன்று நாமக்கல் மாவட்டம், பொம்மைக்குட்டை மேட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 16,031 பயனாளிகளுக்கு 146 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளையும், மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களையும், ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளையும் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ஆர்.ராஜேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஆர்.என். ராஜேஷ்குமார், திரு. வி.எஸ். மாதேஸ்வரன், திரு. கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. பொன்னுசாமி, திரு. பி. இராமலிங்கம், திரு. இ.ஆர்.ஈஸ்வரன், தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., நகராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான
மக்கள் நலம் நாடும் அரசின் மகத்தான செயல்பாடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வடகிழக்கு பருவமழையின் காரணமாக மக்களுக்கு சிரமங்கள் ஏற்படாமல் காத்திடும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, கொட்டும் மழையிலும் நேரில் சென்று நிவாரணப் பணிகளை பார்வையிட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் ஆகியோருடன் இணைந்து களமாடினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்கு பருவமழையின் காரணமாக மக்கள் பாதிக்காத வண்ணம், கொட்டும் மழையிலும் பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று நிவாரணப் பணிகளை பார்வையிட்டதுடன், மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், வடகிழக்கு பருவமழையின் காரணமாக மக்களுக்கு எவ்வித சிரமங்களும் ஏற்படாத வகையில், அரசு அலுவலர்கள் கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது பல்வேறு இடங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.10.2024 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 803 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.78.05 கோடிக்கான கடனுதவி காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைப் பார்வையிடுதல்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.10.2024 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.10.2024 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. சி.என்.அண்ணாதுரை, திரு. எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மு.பெ.கிரி அம்பேத்குமார், திரு. ஓ.ஜோதி, திரு. பெ.சு.தி.சரவணன், மாநகராட்சி மேயர் திருமதி. நிர்மலா வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர். தாரேஸ் அகமது, இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணை செயலாளர் எம்.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.10.2024 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா.இராஜேந்திரன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. தே.மலையரசன், முனைவர்.து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தா.உதயசூரியன், திரு. வசந்தம் க.கார்த்திகேயன், திரு. ஏ.ஜே. மணிக்கண்ணன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர். தாரேஸ் அகமது, இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணை செயலாளர் எம்.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்திட, சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் மற்றும் அறிவிப்புகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்திடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 23.10.2024 அன்று முகாம் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், கடந்த நான்காண்டுகளாக சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக வெளியிட்ட அறிவிப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளின் நிலை, அரசின் நிதி நிலை அறிக்கையில் வெளியிட்ட அறிவிப்புகள், அரசின் பிற துறைகளுடன் இணைந்து அறிவித்துள்ள திட்டங்கள் போன்றவற்றின் முன்னேற்றம், அறிவிப்புகளை விரைந்து நடைமுறைப்படுத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ‘தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களினால் ஏற்பட்ட விளைவுகளால் பணிக்கு செல்லும் மகளிர் அதிகம் உள்ள மாநிலங்களில் முதலாவதாக தமிழ்நாடு திகழ்கின்றது. பெண்கள் மேலும் உயர்ந்த நிலையை அடைய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களும் உரிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்” என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பணி நியமன ஆணைகள் மற்றும் வங்கிக் கடன் உதவிகள் வழங்குதல்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்த் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வான 567 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், 20 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடன் உதவிகளையும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, இ.ஆ.ப., ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.எல். ஈஸ்வரப்பன், இராணிப்பேட்டை மாவட்ட மகளிர் திட்ட திட்ட இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் பார்வையிடுதல்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 17.10.2024 அன்று சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கல்லாலங்குப்பம், பாண்டிய நல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளையும், மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / தருமபுரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் 14.10.2024 மற்றும் 15.10.2024 ஆகிய தேதிகளில் தர்மபுரி மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. கௌரவ்குமார், இ.ஆ.ப., தருமபுரி மாவட்ட மகளிர் திட்ட திட்ட அலுவலர் திருமதி. அ. லலிதா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. பாலகிருஷ்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை இணைய தளத்தில் விற்பனை செய்திட ஏதுவாக இ-வர்த்தக வலைதளத்தில் பதிவேற்றம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட பல்வேறு விற்பனை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை இணையதளத்தில் விற்பனை செய்திடும் வகையில் மண்டல அளவிலான இ- வர்த்தக சேவை இணைப்பு முகாம் (E-Commerce Facilitation Mela) அன்று திருச்சி, சென்னை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றது.

சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 10.09.2024 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான இ- வர்த்தக சேவை இணைப்பு முகாமினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். அம்முகாமின் சிறப்பம்சங்கள் குறித்து கூடுதல் இயக்குநர் திருமதி. எஸ். கவிதா அவர்கள் விரிவாக விளக்கிக் கூறினார். தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் இம்முகாமில் பங்கு பெற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 07.10.2024 மற்றும் 08.10.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மண்டல அளவிலான இ- வர்த்தக சேவை இணைப்பு முகாமில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப., திருமதி. ஸ்வேதா சுமன் இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் (மு.கூ.பொ) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. கவிதா அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைசமூக ஊடகங்களில்சந்தைப்படுத்துதல் குறித்து மிக தெளிவாக எடுத்துரைத்தார்.

இணையதளத்தில் விற்பனை செய்திட ஏதுவாக சுமார் ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஐந்திற்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விபரங்கள் Amazon, Flipkart, Meesho, Boom, GeM, Indiamart, Trade India மற்றும் Boost 360 ஆகியவற்றின் இ-வர்த்தக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வங்கியாளர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மாநில அளவிலான வங்கியாளர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி (Banker's Orientation Training) 21.10.2024 அன்று, சென்னை எழும்பூரில் உள்ள ரேடிசன் ப்ளூ ஹோட்டலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து வங்கியாளர்களுக்கான பயிற்சி கையேட்டினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் குழுக்கள் தயாரிக்கும் பண்டிகை கால
இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கல்லூரி சந்தைகள், விற்பனைக் கண்காட்சிகள் போன்றவற்றின் மூலம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 'மதி தீபாவளி பரிசுப் பெட்டகம்' என்ற பெயரில் இனிப்பு மற்றும் கார தின்பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

16.10.2024 அன்று தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மகளிர் குழுக்கள் தயாரித்த பண்டிகை கால இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனையை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சீ.ஜெயச்சந்திரன், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. இரா. மதி இந்திரா ப்ரியதர்ஷினி, அரசு அலுவலர்கள் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

21.10.2024 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மகளிர் குழுக்கள் தயாரித்த பண்டிகை கால இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனையை தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர்.வி.ஷஜீவனா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மகளிர் திட்ட இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தீபாவளி சிறப்பு இயற்கை சந்தை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் மூன்றாம் சனி மற்றும் ஞாயிறு ஆகிய கிழமைகளில் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இயற்கை சந்தை (Natural Bazaar) நடத்தப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 19.10.2024 மற்றும் 20.10.2024 ஆகிய இரண்டு நாட்கள் தீபாவளி சிறப்பு இயற்கை சந்தை நடைபெற்றது.

இந்த இயற்கை சந்தையில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பட்டு சேலைகள், வேட்டிகள், காட்டன் புடவைகள், நைட்டிகள், போர்வைகள், துண்டுகள் போன்ற தீபாவளி பண்டிகைக்கு தேவையான அனைத்து ஆடை வகைகளும் மற்றும் இயற்கை சார்ந்த பொருட்களான பாரம்பரிய அரிசிகள், சிறுதானிய மற்றும் சிறுதானிய மதிப்பு கூட்டு பொருட்கள், காய்கறிகள் மற்றும் கீரைகள், பனை ஓலை பொருட்கள் போன்ற இயற்கையுடன் சார்ந்த பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன. இந்த இயற்கை சந்தையில் விற்பனை செய்யப்பட்டன.

இந்த விற்பனை சந்தையினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்கள் குறித்த விபரங்களை கேட்டறிந்தார். இந்த நிகழ்வின் போது, கூடுதல் இயக்குநர் திருமதி. எஸ். கவிதா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட மகளிர் திட்ட திட்ட இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் 18.10.2024 மற்றும் 19.10.2024 ஆகிய இரண்டு நாட்கள் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.

தலைமைச் செயலகத்திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களும், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களும் காணொலி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்புகள், இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மணிமேகலை விருது பெற்ற கெங்கவல்லி வட்டார அளவிலான கூட்டமைப்பு

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் "கெங்கவல்லி வட்டார அளவிலான கூட்டமைப்பு" செயல்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டமைப்பில், கெங்கவல்லி வட்டாரத்தில் உள்ள 14 ஊராட்சிகளில் செயல்படும் 615 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உறுப்பினராக இணைந்து செயல்பட்டு வருகின்றன. அனைத்து குழுக்களுக்கும் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளதுடன், 258 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதார தொழில்களுக்காக ரூ.24.78 இலட்சம் கடந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நடப்பாண்டில் 149 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.13 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் வங்கி பெருங்கடனாக பெறப்பட்ட 4 கோடி ரூபாய் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட வங்கிக்கடன் தொகை 100% திரும்ப செலுத்தப்பட்டுள்ளது. கெங்கவல்லி வட்டார அளவிலான கூட்டமைப்பு முன்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பாக தேர்வு செய்யப்பட்டதனால் NRETP வட்டாரமாக தேர்வு செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.50 இலட்சம் வரை வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கு வரப் பெற்றது. அதனை பண்ணை சாரா தொழில்களுக்காக 26 உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டது. அத்தொகையை சுழற்சி முறையில் ரூ.2.48 இலட்சம் வழங்கப்பட்டது. அதன் மூலம் வட்டார அளவிலான கூட்டமைப்பிற்குவட்டித் தொகை வரப்பெற்றது. அதனையும் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தின் தொழிலுக்காக கடனாக வழங்கப்பட்டது.

கெங்கவல்லி வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் வானவில் வள மையம் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த பாலின வள மையத்தில் குழந்தை திருமணம் / பாலியல் தொல்லை / கணவன் மனைவி இடையே பிரச்சனை /குழந்தைகள் கல்வி இடைநிற்றல் போன்ற 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வழக்குகளுக்கு தீர்வும் காணப்பட்டது. இந்த பாலின வள மையத்தின் மூலம் தீர்வு காண முடியாத வழக்குகளை காவல் துறையின் மூலம் மாவட்ட OSC க்கு அனுப்பப்பட்டுள்ளது.

கெங்கவல்லி வட்டாரத்தில் உள்ள 14 ஊராட்சியில் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் பாலின வள மையத்தின் செயல்பாடு மற்றும் அதன் நோக்கமும் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறப்பாக செயல்படும் கெங்கவல்லி வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கு 30.09.2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணிமேகலை விருது வழங்கி பாராட்டினார்.

கொடியூர் சிறப்பு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் சிறப்பான செயல்பாடுகள்

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை வட்டாரம், கெம்மாரம்பாளையம் பழங்குடியினர் வசிக்கும் கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சியில் பழங்குடியினர் வசிக்கும் 8 குக்கிராமங்களை இணைத்து கொடியூர் சிறப்பு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

இந்த 8 பழங்குடியினர் குக்கிராமங்களிலும் உள்ள 177 குடும்பங்களில், இலக்கு மக்கள் - 112, மிகவும் ஏழை - 45, ஏழை- 67, மாற்றுத்திறனாளி-1, நலிவுற்றோர்-10 என்ற எண்ணிக்கையில் மக்கள் உள்ளனர். இலக்கு பட்டியலில் உள்ள தகுதியுடைய மகளிர் அனைவரையும் மகளிர் குழுக்களாக இணைத்து மொத்தம் 12 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகிறன.

கொடியூர் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் தனிநபர் கடனாக 45 நபர்களுக்கு நாளது வரை சுழற்சி முறையில் ரூ.5,55,000/- வரை வழங்கப்பட்டு மிகவும் சிறப்பான முறையில் கடன் திருப்பம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 10 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் செய்ய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் ரூ.5,60,000/- சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்பட்டு கடன் திருப்பம் முறையாக செய்யப்பட்டு வருகிறது. 9 குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பாக ரூ. 37,00,000/- பெற்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் தாங்கள் பெற்ற கடன் தொகையைக் கொண்டு, விவசாயம் மேற்கொண்டு, ராகி, கொள்ளு, சாமை, வாழை, அவரை, மரவள்ளி கிழங்கு போன்ற பயிர்களை வளர்த்தும், ஆடு, மாடுகளை வளர்க்கும் தொழிலையும் செய்து வருகின்றனர்.

மேலும் மலைகளில் கிடைக்கும் தேன், கடுக்காய், பூச்சிக்காய், ஓமகுச்சி, வேங்கைமரப்பால், நெல்லிக்காய், சர்க்கரை வள்ளிக் கீரை ஆகியவைகளை சேகரித்தும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் விற்பனை செய்து வருகின்றனர்

கொடியூர் சிறப்பு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் 8 குக்கிராமங்களில் உள்ள அனைவருக்கும் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு, காப்பீடு, PMJJBY, PMSBY, AAY போன்றவை தொடங்கப்பட்டுள்ளன. ஊராட்சி மன்றத்தின் உதவியுடன் பட்டா இல்லதவர்களுக்கு பட்டா பெற்று தரப்பட்டுள்ளதுடன், அனைத்து மக்களுக்கும் அரசு வழங்கும் அனைத்து நலத் திட்ட உதவிகளும் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

30.09.2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களால், கொடியூர் சிறப்பு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு மணிமேகலை விருது வழங்கப்பட்டுள்ளது.

தீனதயாள் உபாத்தியாய
கிராமப்புறத் திறன் பயிற்சித்
திட்டம் DDU-GKY

வெற்றிக் கதைகள்

சங்கராபுரத்தில் இருந்து சிங்கப்பூர் வரை...

எனது பெயர் செல்வம். நான் கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், புது பள்ளப்பட்டு என்ற கிராமத்தைச் சேர்ந்தவன். எனது தாய் தந்தையர் இருவரும் கூலி தொழிலாளிகள். குடும்ப வறுமையால் பெரும் போராட்டத்திற்குப் பிறகு எனது டிப்ளமோ இன் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக் இன்ஜினியரிங் படிப்பை முடித்தேன். வெளிநாடு செல்ல வேண்டும் என்பது என்னுடைய கனவாக இருந்தது. அந்த சமயத்தில் சென்னை மதுரவாயிலில் உள்ள “கேப்பிடல் எஜிகேசனல் சாரிட்டபுள் டிரஸ்ட்டில்'' தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் சி.என்.சி. பயிற்சியில் சேர்ந்தேன். அங்கு எனக்கு பயிற்சி மட்டும் இல்லாமல் அனைத்து சலுகைகளும் இலவசமாக வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பிறகு நான் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற கனவு நிறைவேறும் வகையில் இந்த CNC பயிற்சி எனக்கு மன நிறைவாக அமைந்தது.

பின்பு, நான் அந்நிறுவனத்தின் மூலம் சென்னை பாடியில் அமைந்துள்ள Techno molds எனும் நிறுவனத்தில் மாதம் 12000 ரூபாய் சம்பளத்திற்கு CNC ஆபரேட்டராக பணியில் அமர்த்தப்பட்டு பின்பு படிப்படியாக CNC Setter ஆக பதவி உயர்வு பெற்றேன். பின்பு நான் வெளிநாடு வேலைக்கு முயற்சி செய்யும்போது எனக்கு சிங்கப்பூரில் உள்ள Grand Venture Technology Limited என்னும் நிறுவனத்தில் சி.என்.சி. புரோகிராமர் மற்றும் ஆபரேட்டர் ஆக வேலை வாய்ப்பு கிடைத்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி இப்பொழுது நான் சிங்கப்பூரில் பணிபுரிந்து வருகிறேன். மாதத்திற்கு ரூபாய் ஒரு லட்சத்து 90 ஆயிரம் சம்பளமாகப் பெற்று வருகிறேன். இது எனது கனவிலும் எதிர்பாராத ஒரு திருப்பமாகும்.

இந்த வருமானம் எனது குடும்பத்தினரின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு அரசிற்கும், அரசாங்கத்திற்கும், DDUGKY திட்டத்திற்கும் மற்றும் Capital Educational and Charitable Trust-கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் போன்ற சாமானிய கிராமப்புற இளைஞர்களுக்கு வெளிநாடு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தமை குறித்து இந்நேரத்தில் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

- செல்வம்

வணிகம் வளர்க...

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ராகி முறுக்கு, தினை உருண்டை

தென்றல் மகளிர் சுய உதவிக் குழு,
செங்கல்பட்டு மாவட்டம்
கைபேசி : 91502 82418

பேப்பர் மெஷ் பொம்மைகள்

பாரேரி கைவினை மகளிர் சுய உதவிக் குழு
செங்கல்பட்டு மாவட்டம்
கைபேசி : 81244 18174

தரமான முந்திரி

ஈஸ்வரி மகளிர் சுய உதவிக் குழு
அரியலூர் மாவட்டம்
கைபேசி : 78268 49788

கிரிஸ்டல் மணி மாலைகள்

ஸ்ரீ மதுரை மீனாட்சி மகளிர் சுய உதவிக் குழு
அரியலூர் மாவட்டம்
கைபேசி : 80122 63519

கருப்பு கவுணி அரிசி

தேனருவி மகளிர் சுய உதவிக் குழு
தர்மபுரி மாவட்டம்
கைபேசி : 98650 31682

அன்னை தெரசா சென்னாம்பேட்டை பகுதி அளவிலான கூட்டமைப்பு

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் "அன்னை தெரசா சின்னாம்பேட்டை பகுதி அளவிலான கூட்டமைப்பு" 2019 ஆம் ஆண்டு அன்று துவக்கப்பட்டது. மொத்தம் 19 மகளிர் குழுக்கள் இணைந்துள்ள இந்தக் கூட்டமைப்பிற்கு சுழல் நிதி ரூ. 50,000/- வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டமைப்பு மூலம் சிறுபான்மை நலத்துறையின் கீழ் 83 நபர்கள் ரூ. 7,15,000/- நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதுடன், 10 நபர்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்பில் உள்ள 13 உறுப்பினர்கள் வீட்டிலிருந்தபடியே துணிகளுக்கு ஜரி அலங்காரங்கள் (Zari work) செய்யும் பணியில் ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். மேலும் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் விற்பனை செய்திட தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் அனைத்து விற்பனை கண்காட்சிகளிலும் கலந்து கொண்டு தங்களது ஜரி வேலை துணிகளை விற்பனை செய்து வருகின்றனர்.

அன்னை தெரசா சென்னாம்பேட்டை பகுதி அளவிலான கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாடுகளுக்காக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணிமேகலை விருது வழங்கிப் பாராட்டியுள்ளார்.

ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழு பெற்ற வெற்றி

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் சமையல் கலையில் ஆர்வம் உள்ளவர்களாக இருந்ததினால், நிகழ்ச்சிகளுக்கு சமையல் செய்து கொடுத்து சிறிய அளவில் வருவாய் ஈட்டி வந்தனர். இந்நிலையில் சமுதாய அமைப்பாளர் மூலம் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் குறித்து அறிந்து கொண்ட ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், அத்திட்டத்தில் கலந்து கொண்டு பணியாற்றிட விரும்பி பதிவு செய்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட இக்குழுவின் உறுப்பினர்கள் பள்ளிக்குழந்தைகளுக்குகாலைஉணவுதயாரித்துக் கொடுக்கும் பணியை செய்து வருகின்றனர். தங்களுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

பொருளாதார தன்னிறைவு பெற வழிகாட்டிய இயக்கம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

வெற்றிக் கதைகள்

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சி பகுதி, வார்டு எண் 11ல் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 12 பெண்களை இணைத்து மரகத முல்லை மகளிர் சுய உதவிக் குழு அமைக்கப்பட்டது. தினக்கூலி வேலைக்கு சென்று அதன் மூலம் ஈட்டும் வருமானத்தால் வாழ்க்கையை நடத்தி வந்த இக்குழுவின் உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலம் தையல் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் இக்குழுவில் உறுப்பினராக உள்ள 5 உறுப்பினர்கள் இணைந்து கால் மிதியடி தயாரிக்கும் தொழில் செய்ய முடிவு செய்தனர். ஆரம்பத்தில் கைகளால் மிதியடி தயாரித்து வந்தனர். கைகளால் தயாரிப்பதால் நேரமும் அதிகமாவதோடு, குறைந்த எண்ணிக்கையிலேயே மிதியடிகள் உற்பத்தி செய்தனர்.

எனவே, மிதியடி தயாரிக்கும் இயந்திரம் வாங்குவதற்கு தேவையான முதலீட்டிற்காக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வங்கி கடன் இணைப்பாக ரூ.4,80,000/- பெற்றுத் தரப்பட்டது. அந்தத் தொகையில் இயந்திரம் ஒன்று வாங்கி அதிக எண்ணிக்கையில் மிதியடிகள் தயார் செய்து உள்ளூர் கடைகள் மற்றும் மொத்த வியாபார கடைகளுக்கு விற்பனை செய்து வந்தனர். மேலும், ஜவுளி கடைகளுக்குத் தேவையான மிதியடிகளையும் வியாபார ஆணையின் மூலம் தயாரித்து வழங்கியதன் மூலம் ரூ.20,000/- இலாபம் ஈட்டினர்.

அடுத்தக்கட்டமாக கூடுதல் இயந்திரங்கள் கொள்முதல் செய்திட கூடுதல் வங்கிக் கடன் இணைப்பு பெற்றிட முயற்சிகள் மேற்கொண்டு வரும் மரகத முல்லை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், பொருளாதார தன்னிறைவு பெற்றிடவும் வழிகாட்டி வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தெரிந்து சொல்லுங்கள் –3

1. சுய உதவிக் குழுக்களுக்கும், வங்கிக்கும் இடையே பாலமாக செயல்படுவது யார்?
2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்பாட்டுக்கு வந்த ஆண்டு?
3. சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்படும் தொகை எவ்வளவு?
4. தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு?
5. சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கு வழங்கப்படும் விருதின் பெயர் என்ன?

மேற்கண்ட வினாக்களுக்கு சரியான விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பும் நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்
(மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்),
அன்னை தெரசா மகளிர் வளாகம், முதல் தளம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

சட்டம் என்ன சொல்கிறது?

ஆட்கடத்தல் குற்றங்களுக்கான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு – 370

ஆட்கடத்தலில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகள் குறித்து இப்பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. சுரண்டல் நோக்கத்துக்காக வேலைக்குச் சேர்த்தல், ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்கு கொண்டு செல்லுதல், தங்களது பொறுப்பில் வைத்துக் கொள்ளுதல் அல்லது இடம் மாற்றுதல் மற்றும் தங்களது பொறுப்பில் பெற்றுக் கொள்ளுதல் போன்ற ஆள் கடத்தல் குற்றங்களை மிரட்டுதல், பலவந்தப்படுத்துதல் மற்றும் கட்டாயப்படுத்துதல், கடத்திச் செல்லுதல், மோசடி செய்தல், ஏமாற்றுதல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், ஒருவரை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு பணம் பெறுதல் அல்லது பணம் கொடுத்தல் அல்லது ஆதாயம் அடைதல் போன்றவற்றைக் காட்டி ஒப்புதல் பெற்று, வேலைக்குச் சேர்த்தல் போன்ற ஆள் கடத்தல் குற்றங்களை செய்பவர்களுக்கு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 370ன் கீழ் தண்டனை வழங்கப்படும்.

மேற்படி குற்றங்களுக்கு தண்டனை :

ஆட்கடத்தல் செய்பவருக்கு 7 முதல் 10 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். அதில் ஒருவருக்கு மேல் ஆட்கடத்தல் செய்திருந்தால் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்.

கடத்தப்பட்டவர் சிறாராக இருந்தால் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்.

ஒன்றுக்கு மேற்பட்ட சிறார்களைக் கடத்தியிருந்தால் 14 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படும்.

சிறார் கடத்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட முறை ஒருவர் தண்டிக்கப்பட்டிருந்தால், அந்த நபருக்கு ஆயுட்காலம் முடியும் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

ஆட்கடத்தல் சம்பவத்தில் அரசு அதிகாரியோ, காவல்துறையை சேர்ந்தவோ ஈடுபட்டிருந்தால், அவர்களுக்கு ஆயுட்காலம் முழுவதும் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 370–ஏ : கடத்தப்பட்ட நபரை சுரண்டுதல்

பாலியல் ரீதியாகச் சுரண்டல், உடலுழைப்புச் சுரண்டல், கொத்தடிமை நிலை, கட்டாயப்படுத்தி உறுப்புகளை நீக்குதல் போன்றவையும் இக்குற்றத்தில் அடங்கும். பாதிப்புக்குள்ளானவரின் சம்மதம் இருந்தாலும் அது சட்டப்படி செல்லாது.

கடத்தப்பட்ட சிறாரை அறிந்தே பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துபவருக்கு 5 முதல் 7 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

கடத்தப்பட்ட நபரை அறிந்தே பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துபவருக்கு 3 முதல் 5 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

அமைதி, வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாள் (நவம்பர் 10)

அமைதி, வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாள் (World Science Day for Peace and Development) என்பது சமூகத்தில் அறிவியலின் முதன்மையான பாத்திரத்தை உரத்துசுட்டும் பன்னாட்டுக் கடைபிடிப்பு நாளாகும். இந்நாள் நவம்பர் மாதம் 10 ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது. இந்நாள் நடைமுறையில் எழும் அறிவியல் சிக்கல்களைப் பரந்துபட்ட மக்கள் மன்றத்துக்குக் கொண்டு சென்று விவாதங்களை முன்னெடுக்கும் நாளாகும். உலக அறிவியல் நாள் பன்னாட்டவையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெஸ்கோவால்) 2001 ஆம் ஆண்டில் பறைசாற்றப்பட்டு, 2002 ஆம் ஆண்டில் இருந்து கடைபிடிக்கப்படுகிறது.

தினம்... தினம்...

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள்

நவம்பர் 7

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் (National Cancer Awareness Day) புற்றுநோய் குறித்து இந்தியாவில் விழிப்புணர்வை ஏற்படுத்த தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் நவம்பர் மாதம் 7-ஆம் தேதி நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. உலகளவில் புகையிலை அதிகம் விற்பனை செய்யப்படும் நாடுகளில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. அதனால் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் இந்தியா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது. ஆனால், இந்தியா போன்ற நாடுகளில் புற்றுநோய் சிகிச்சை பற்றியும், நோயின் தாக்கத்தை பற்றியும் போதிய விழிப்புணர்வு இல்லை. எனவே இந்திய மக்களிடம் விழிப்புணர்வு உண்டாக்கும் நோக்கத்துடன் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

உலக நீரிழிவு நாள்

நவம்பர் 14

உலகை அச்சுறுத்தும் நோய்களுள் ஒன்றான நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்) குறித்த விழிப்புணர்வை அனைவரும் பெற வேண்டும் என்ற நோக்குடன், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 14-ம் தேதி ஐக்கிய நாடுகள் சபையால் உலக நீரிழிவு நாள் (World Diabetes Day) அறிவிக்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் இத்தினம் ஐக்கிய நாடுகள் அவையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோய்க்குப் பயன்படுத்தும் இன்சுலின் மருந்தினை சார்ள் பெஸ்ட் என்பவருடன் இணைந்து 1921 இல் பிரட்ரிக் பான்ரிங் என்பவர் கண்டுபிடித்தார். இவரது பிறந்த தின நினைவாகவே இன்றைய நாள் நினைவு கூரப்பட்டு வருகிறது. சர்வதேச ரீதியில் ஏறத்தாழ 150 நாடுகளில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து இந்நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். சர்வதேச நீரிழிவு நோய் சம்மேளனத்தினாலும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் 1991 முதல் முறையாக நீரிழிவு தினம் அறிமுகப்படுத்தப்பட்டது.

பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள்

நவம்பர் 25

பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள் (International Day for the Elimination of Violence against Women) ஆண்டுதோறும் நவம்பர் 25 ஆம் நாள் அன்று உலகெங்கிலும் கொண்டாடப்பட்டு வரும் ஒரு சிறப்பு நாள் ஆகும்.

உலகளாவிய ரீதியில் பெண்கள் இன்று பல விதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளி உலகிற்கு காட்டி அதற்கான நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் ஆகியன முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1999 டிசம்பர் 17ஆம் நாள் கூடிய போது ஆண்டு தோறும் நவம்பர் 25 ஆம் நாளை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினமாகப் பிரகடனம் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட **முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் **ஆதரவை தாருங்கள்!**

முற்றத்திற்கு சந்தா **செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
Scan செய்யவும்

முற்றம் இதழின் சந்தா விபரம்	
ஒரு ஆண்டு	ரூ. 240/-
இரண்டு ஆண்டு	ரூ. 450/-
மூன்று ஆண்டு	ரூ. 680/-

விளம்பரக் கட்டணம்	
அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சந்தாதாரர்களே நேரடியாக முற்றம் https://mutram.org.in/Login.aspx என்ற இணையதள முகவரி அல்லது https://play.google.com/store/apps/details?id=com.isky.mutram_magazine என்ற கைபேசி செயலியில் தங்களது முகவரியினைப் பூர்த்தி செய்தல் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற பணிகளை செய்து கொள்ளலாம்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

வெற்றிக் கதைகள்

விண்ணைத் தொடும் உயர்வு ! இணை மானிய நிதித் திட்டத்தின் தயவு !!

என் பெயர். சுதா, சேலம் மாவட்டம், தாரமங்கலம் வட்டாரம், துட்டம்பட்டி கிராமத்தில் வசித்து வரும் நான், பூ வியாபாரம் செய்வதன் மூலம் ஓரளவு வருமானம் பெற்று வந்தேன். எங்கள் பகுதியில் விசைத்தறி தொழில் அதிகம் என்பதால், பூ வியாபார நேரம் போக மீதி நேரத்தில் விசைத்தறி ஓட்ட கற்றுக் கொண்டு, கூலிக்கு தறியும் ஓட்டிக் கொண்டிருந்தேன். அப்போது என் கணவரும் நானும் சொந்தமாக நான்கு தறிகள் நிறுவலாம் என யோசித்தோம்.

அதன்படி, நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுவில் கடன் பெற்றேன். அத்துடன் எனது நகைகளை விற்று அதைக் கொண்டு கிடைத்த பணத்தில் நான்கு விசைத்தறிகளை எங்கள் வீட்டிலேயே புதிதாக நிறுவினோம். அதில் வருமானம் வந்தது. இருந்தாலும் இன்னும் முன்னேறி ஒரு தொழில் முனைவோராக 4 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க விரும்பினேன். விசைத்தறியிலேயே புதிய கணினி தொழில் நுட்பங்களை பயன்படுத்தி சேலை நெய்து அடுத்தக் கட்டத்திற்கு செல்லலாம் என நினைத்தோம். ஆனால், அதெல்லாம் எட்டாத தூரத்தில் இருந்தது.

புதிய கணினி தொழில்நுட்பத்துடன் கூடிய விசைத்தறிகள் நிறுவ 15 இலட்சம் ரூபாய் தேவைப்படும் எனக் கூறினர். ‘முயற்சி திருவினையாக்கும், முயன்றால் முடியாதது எதுவுமில்லை’ என்பதை உறுதியாக நம்பினோம். எங்கள் வட்டாரத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்ட செயல்பாடுகள் குறித்து கேள்விப்பட்டிருந்தோம்.

எனவே, மேற்கண்ட 15 இலட்ச ரூபாய் முதலீட்டில் தொழிற்கடன் பெற அவர்களை அணுகினோம். அப்போது அவர்கள் இணை மானிய நிதி (MGP) கடன் பெற வாய்ப்புள்ளது என்றும், அதற்கு முதல் தகுதியாக சுய உதவிக் குழு உறுப்பினராக அல்லது சுய உதவிக் குழு குடும்பத்தாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்தனர். ஏற்கனவே நான் கலசம் மகளிர் குழுவில் உறுப்பினராக இருந்ததால் அதில் பாஸ் ஆனேன். அடுத்து 10 சதவீதம் சொந்த பங்களிப்பு தர முடியுமா என்றார்கள் அதிலும் பாஸ் ஆனேன். ரூபாய் ஒன்றரை இலட்சம் திரட்டி வங்கியில் கட்டினேன்.

அதன் பிறகு வங்கியினர் நாங்கள் தொழில் செய்யும் தொழில் இடத்தைப் பார்வையிட்டு, எனக்கு கடன் தொகை விடுவிக்க சம்மதம் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாநில அலுவலகத்தில் இருந்து என்னிடம் வீடியோ கால் மூலமாக உயர் அதிகாரி எனது தொழில் திட்டம் குறித்து விவரமாக கேட்டறிந்தார். இறுதியாக எங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் கடன் கிடைத்து விட்டது. அதில் 30 சதவீதம் ரூ. 4,50,000/- மானியமாக கிடைத்தது. இன்று நான் ஒரு வெற்றிகரமான தொழில் முனைவோராக 5 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறேன். தினக்கூலியாக இருந்த என்னை எண்ணிப் பார்க்காத உயரத்திற்கு உயர்த்தியுள்ளது வாழ்ந்து காட்டுவோம் திட்டம்!

- சுதா, கலசம் மகளிர் சுய உதவிக் குழு, துட்டம்பட்டி கிராமம், சேலம் மாவட்டம்.

கொத்தனார் தொழில் பயிற்சி ! வாழ்க்கையில் உயரும் முயற்சி !

திருச்சி மாவட்டம், முசிறி ஒன்றியம், திருத்தலையூர் ஊராட்சியில் அனைத்து வகுப்பினையும் சேர்ந்த ஏறத்தாழ 6000 -க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றோம். பருவமழைக் காலத்தில் புளியஞ்சோலையில் இருந்து வரும் தண்ணீரை எங்களது ஏரியில் சேமித்து விவசாயம் செய்து வருகின்றோம். வருடத்தில் மூன்று முதல் நான்கு மாதம் மட்டுமே விவசாயத்தில் ஈடுபட முடிகின்றது. இவற்றிலும் குறிப்பிட்ட சிலர் விவசாய நிலமும் இல்லாமல் கூலி வேலை செய்து வருகின்றனர். அன்றாட வாழ்வுக்கு ஏற்ற வருமானம் இல்லாமல் ஏழ்மை நிலையில் வசித்து வருகின்றோம். பொருளாதாரத்திற்காக எங்கள் ஊர் மக்கள் சென்னை, திருச்சி, கோவை, துறையூர் போன்ற ஊர்களில் தங்கி கட்டிட வேலைகளை செய்து வருகின்றனர்.

இந்தச் சூழலில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் (VKP) முசிறி வட்டார திட்டப் பணியாளர்கள், எங்கள் ஊரில் கூட்டம் நடத்தி பயிற்சியுடன் கூடிய வேலை வழங்குவதாகவும், அதன் மூலம் வருமானம் வரும் எனவும் கூறினர். மேலும், இந்த பயிற்சிக்காக 20 நபர்களையும் தேர்வு செய்தனர். அதன்படி, சமுதாயத் திறன் பள்ளியில் 20 பேர் கொண்ட உறுப்பினர்களை இணைத்து கொத்தனார் தொழிற்பயிற்சி வழங்கினர்.

முதல் நாள் பயிற்சியில், பயிற்சியாளர் தகவல் பலகை செய்யும் பயிற்சியினை முசிறி ஒன்றிய பணி மேற்பார்வையாளர் வழங்கினார். நாங்கள் ஆர்வமுடன் அதனைக் கற்றுக் கொண்டோம். ஒரு தகவல் பலகை செய்யத் தேவையான, கம்பி, சிமெண்ட், மணல் ஆகியவற்றின் அளவினை மிகத் தெளிவாக விளக்கினார். நாங்கள் செய்யும், இந்த தகவல் பலகையின் தேவை அதிக அளவில் இருப்பதாகவும், அதனை திறம்பட செய்யவும் எங்களுக்கு ஊக்கம் அளித்தார். எங்களின் பயிற்றுநரான, எங்கள் பகுதியைச் சேர்ந்த கொத்தனார் மூலமாக தகவல் பலகை செய்தல், சிமெண்ட் தூண் செய்தல், சிமெண்ட் மூடி செய்தல், ஜாலி செய்தல், உறிஞ்சுக்குழாய் செய்தல், சிமெண்ட் வளையம் செய்தல் போன்ற பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டோம்.

பயிற்றுநர் பயிற்சிக்குத் தேவையான கம்பியினை அளவெடுக்க மற்றும் நறுக்க, இந்த பயிற்சியின் மூலமாக நாங்கள் கற்றுக் கொண்டவைகளைக் கொண்டு, தொழிற்குழு அமைத்து சுயமாக வருமானம் ஈட்ட முடியும் என்ற தன்னம்பிக்கை எங்களுக்கு கிடைத்துள்ளது. மேலும், தகவல் பலகை எவ்வளவு செய்தாலும் அதனைப் பெற்றுக்கொள்கிறோம் என ஒன்றிய பணி மேற்பார்வையாளர் கூறியது, எங்களுக்கு மேலும் ஊக்கத்தினை அளித்தது.

நாங்கள் எங்களது பயிற்சியினைத் திறம்பட மேற்கொண்டு வந்தோம். இந்நிலையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அதிகாரியை எங்களது பயிற்சியினை பார்வையிட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர் அவர்கள் அழைத்து வந்து பார்வையிடச் செய்து, பயிற்சிக்குப் பின் கொட்டகை (Shed) அமைத்து எங்களது உற்பத்தியை மேற்கொண்டு செய்ய உதவுவதாக உத்தரவாதம் பெற்று தந்தார். வாழ்வின் இன்ப ஒளியினை அருகாமையில் பார்க்கப் போகிறோம் என்ற உத்வேகத்துடன் உழைக்கத் தயாராகி வருகிறோம். மேலும், சிமெண்ட் செங்கல், ஹாலோ பிளாக், சுற்றுச்சுவர் தூண் தயாரிக்க திட்டமிட்டுள்ளோம்.

உலக வங்கி ஆலோசகர் எங்களுடைய சமுதாயத் திறன் பள்ளியைப் பார்வையிட்டு, தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பெண்கள் மட்டும் இணைந்து செய்யும் இந்த கொத்தனார் தொழிற்குழு என்ற பெருமை உங்களுக்குத்தான் எனக் கூறி ஊக்கமளித்தார்.

எங்கள் தொழிற்குழுவின் அடுத்தக்கட்ட முயற்சியாக கொட்டகை அமைக்க இடம் தேர்வுசெய்யப்பட்டுவேலைநடந்துவருகிறது. மேற்கொண்டு, திருச்சிராப்பள்ளியில் உள்ள முசிறி, தா.பேட்டை, தொட்டியம், துறையூர், உப்பிலியபுரம் ஆகிய ஒன்றியங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட முன்னுரிமை பணிகளுக்கானத் தகவல்பலகைகள் மற்றும் உறிஞ்சிக்குழிகள் அமைக்கும் பணிகளுக்கான உறைகளை (Ring) வெளிச்சந்தையில் கொள்முதல் செய்வதைத் தவிர்த்து, எங்களிடம் கொள்முதல் செய்திட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த செய்தியினை அறிந்த நாங்கள் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தோம்.

எங்கள் தொழிற்குழுவின் மீது நம்பிக்கைக் கொண்டு இந்த வாய்ப்பினை வழங்கியுள்ளனர். இதில் எவ்வித குறைகளும் ஏற்படாத வகையில் உற்பத்தி செய்திட உறுதிப் பூண்டுள்ளோம். இப்பொழுதுதான் வாழ்வில் உழைப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்கப் போகின்றோம். வாழ்க்கையின் வறுமைப் பிடியில் சிக்கித் தவித்த எங்களுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வழங்கிய இந்த நம்பிக்கைக்கு எங்களின் மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- கொத்தனார் தொழிற்குழு உறுப்பினர்கள்,
திருத்தலையூர், முசிறி வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

DDU-GKY
Deen Dayal Upadhyaya Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன்
பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ்
செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள்
தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

155 330

LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல்
மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ddugkytn2016@gmail.com

உடல் நலம் காப்போம்...

இளம்பெண்களை அச்சுறுத்தும் எலும்பு தேய்மானம்...

முன்பெல்லாம் 40 வயதைக் கடந்த பெண்களுக்குத்தான் இடுப்புவலி, முதுகுவலி, மூட்டுவலி எனப் பல பிரச்னைகள் ஏற்படுவது வழக்கம். தற்போது 35 வயதைத் தாண்டியதும் எலும்பு தேய்மானம் ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

எலும்பு தேய்மானத்துக்கு முக்கியக் காரணம், உடல் உழைப்பு இல்லாததே. அந்தக் காலத்துப் பெண்களுக்கு இந்தப் பிரச்னை அவ்வளவாக இருந்ததில்லை. ஏனென்றால், அவர்கள் வீட்டு வேலைகள், தண்ணீர்க் குடம் சுமத்தல், பக்கெட்டுகளில் தண்ணீர் எடுத்துக் கொண்டு நடப்பது, கிணற்றில் தண்ணீர் இறைப்பது, குழந்தைகளைத் தூக்கி விளையாடுவது, ஆட்டுக் கல்லில் மாவு அரைப்பது, எங்கு போனாலும் நடந்து செல்வது... என இருந்ததால் கை, கால்களுக்கு உழைப்பு இருந்தது.

ஆனால் இப்போது, எல்லாவற்றுக்குமே இயந்திரங்கள் வந்து விட்டன. வீட்டு வேலைகள் செய்வதற்கு ஆட்களையும் வைத்துக் கொள்கிறார்கள். மார்க்கெட்டுக்குச் சென்று மளிகைப் பொருட்கள், காய்கறிகளைத் தூக்கி வருவது இல்லை. எல்லாவற்றுக்கும் வாகனங்களைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் உடல் இயக்கம் இன்றி இருப்பதால், கால்சியம் (சுண்ணாம்புச்சத்து) கிரகிக்கப்படுவது பாதிக்கப்பட்டு, எலும்பு தேய்மானம் அடைந்து, இடுப்பு, தோள், மணிக்கட்டு, மூட்டு, முதுகு, கழுத்துப் பகுதிகளில் வலி ஏற்படும்.

உடல் உழைப்பைவிட அதிக உணவு எடுத்துக் கொள்வதன் மூலம் உடல் எடை அதிகரிப்பது. காபி, டீ போன்ற பானங்களை அதிகமாகக் குடிப்பதால், உடலில் உள்ள கால்சியம் குறையும். குளிர்பானங்கள், கால்சியம் சத்தை அழிக்கும் தன்மைகொண்டவை. பாக்கெட்டில் வைத்து விற்கப்படும் துரித உணவுகள் மற்றும் நொறுக்குத்தீனி ஆகியவையும் எலும்பு தேய்மானத்துக்குக் காரணமாகின்றன.

இன்றைக்கு இருக்கும் பரபரப்பான சூழ்நிலையில், மேற்சொன்ன வேலைகளையெல்லாம் செய்ய முடியவில்லை என்றால், தினமும் காலையில் 20 முதல் 40 நிமிடங்கள் வரை ரெஸிடன்ஸ் பயிற்சி (Resistance exercise) செய்வது நல்லது. அதாவது, நம் உடலை நாமே தாங்கிச் செய்யக் கூடிய உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும். தண்ணீர் பாட்டிலைக் கையில் வைத்துக் கொண்டு மேலே, கீழே தூக்கி கைகளை இயக்குவதால் தோள்களுக்கு வலு சேர்க்கும். தோப்புக்கரணம் போடுவது கால்களுக்கு வலு சேர்க்கும். அதோடு ஏரோபிக் போன்ற உடற்பயிற்சிகளையும் செய்ய வேண்டும். குறைந்தபட்சம் 20 நிமிடங்களாவது நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். எலும்புகளை உறுதியாக வைத்துக் கொள்ள வைட்டமின் டி உதவுகிறது. அதனால், காலை நேரங்களில், வாரத்தில் மூன்று நாட்கள் மிதமான வெயிலில் 15 நிமிடங்களாவது இருப்பது நல்லது. இதன் மூலம் எலும்பு தேய்மானத்தைத் தடுக்கலாம்.

உணவுகள்

பெண்களுக்கு ஏற்படும் எலும்பு தேய்மானத்துக்கு உடற்பயிற்சி மட்டும் செய்யாமல், உணவிலும் கவனம் செலுத்த வேண்டும். எலும்பை வலுப்படுத்த, கால்சியத்தோடு புரதச்சத்தும் தேவைப்படுகிறது. அதனால் புரதம், கால்சியம் அதிகம் உள்ள உணவுகளான பால், பாலாடைக் கட்டி, பால் பொருட்கள்,கீரைவகைகள்,காய்கறிகள்,மீன்,முட்டை, கோழி, ராகி, கேழ்வரகு, கொள்ளு, பருப்பு வகைகள், பாதாம் மற்றும் ஆப்பிள், ஆரஞ்சு, வாழைப்பழம் ஆகியவற்றில் ஏதேனும் சிலவற்றையாவது தினமும் உணவில் சேர்க்க வேண்டும்.

இதேபோல குழந்தைகளும் படிக்கும் வயதில் நன்றாக ஓடி, ஆடி விளையாட வேண்டும். அப்படி விளையாடாமல், செல்போன், டி.வி., வீடியோகேம்ஸ் என இருந்தால் அவர்களின் வளர்ச்சி பாதிக்கும். எனவே, சிறு வயதில் இருந்தே கால்சியம் மற்றும் புரதச்சத்து உள்ள உணவுகளை உட்கொள்வது நல்லது.

பெண்களுக்கு 40 வயது தாண்டியதும் மெனோபாஸ் வந்துவிடுகிறது. அந்தச் சமயத்தில் கால்சியம் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால் மூட்டுவலி, முதுகுவலிப் பிரச்னைகள் வருகின்றன. அந்தச் சமயத்தில், கால்சியம் அதிகம் உள்ள நாட்டுக்கோழி, மீன், இறால், முட்டை மற்றும் சோயா பீன்ஸ் போன்ற உணவுகளைச் சேர்த்துகொள்ள வேண்டும்.

உணவு, உடற்பயிற்சி மற்றும் வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டால் மட்டுமே எலும்பு தேய்மானத்துக்கு தீர்வு காண முடியும் ■



பீட்ரூட் பன்னீர் பணியாரம்

பணியாரம் என்றால் யாருக்குத் தான் பிடிக்காது? சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே பணியார பிரியர்கள் தான். பணியாரத்தை எப்படி கொடுத்தாலும் ரசித்து ருசித்து சாப்பிட்டு விடலாம், அதிலும் இந்த பீட்ரூட் மற்றும் பன்னீர் சேர்த்த பணியாரம் அட்டகாசமான சுவையை கொடுக்கக் கூடியதாக இருக்கும். சுவையான பீட்ரூட் பன்னீர் பணியாரம் செய்வது எப்படி? என்பதை தெரிந்து கொள்ளலாம்.

தேவையான பொருட்கள் :

துருவிய பீட்ரூட் - அரை கப், துருவிய பன்னீர் - அரை கப், இட்லி மாவு - 2 கப், பெரிய வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 2, கருவேப்பிலை - ஒரு கொத்து, மல்லித்தழை - சிறிதளவு உப்பு - தேவையான அளவு, நெய் அல்லது எண்ணெய் - தேவைக்கு ஏற்ப

செய்முறை :

பீட்ரூட் பணியாரம் செய்வதற்கு முதலில் தேவையான எல்லா பொருட்களையும் தயாராக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பவுலில் இரண்டு கப் அளவிற்கு இட்லி மாவை எடுத்துக் கொள்ளுங்கள். இதனுடன் ரெண்டு பெரிய வெங்காயத்தை தோலுரித்து பொடி பொடியாக நறுக்கி சேர்க்க வேண்டும். ரெண்டு பச்சை மிளகாயை காம்பு நீக்கி பொடி பொடியாக நறுக்கி சேருங்கள். பின் இவற்றுடன் ஒரு கொத்து கருவேப்பிலையை கழுவி சுத்தம் செய்து பொடியாக நறுக்கி சேர்க்க வேண்டும். அதே போல மல்லித் தழைகளையும் பொடி பொடியாக நறுக்கி சேருங்கள்.

இப்பொழுது ஒரு சிறிய மீடியம் சைஸ் அளவிலான பீட்ரூட்டை துருவி எடுத்துக் கொள்ளுங்கள். அதையும் இந்த மாவுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். கடைசியாக அரை கப் அளவிற்கு நன்கு மெலிதாக துருவிய பன்னீரை எடுத்து சேர்த்துக் கொள்ளுங்கள். தேவையான அளவிற்கு உப்பு சேர்த்து நன்கு கலந்து விடுங்கள். அவ்வளவுதான் இப்பொழுது பணியார மாவு ரெடி!

பணியார சட்டியை அடுப்பில் வைத்து காய விடுங்கள். சட்டி காய்ந்ததும் அதில் நெய் அல்லது எண்ணெய் நன்கு தாராளமாக ஊற்றிக் கொள்ளுங்கள். பின்பு ஒவ்வொரு குழியிலும் மாவை எடுத்து ஊற்றி, அடுப்பை மிதமான தீயில் வையுங்கள். நன்கு ஒருபுறம் வெந்ததும், மறுபுறம் திருப்பி போடுங்கள். பணியாரம் ஒன்று போல சிவக்க வெந்து வந்ததும் தட்டில் வைத்து பரிமாற வேண்டியது தான்.

இந்த சுவையான பீட்ரூட் பன்னீர் பணியாரம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே ரொம்பவே விரும்பி சாப்பிடக் கூடியதாக இருக்கும். பீட்ரூட் பன்னீர் பணியாரத்துடன் காரசாரமான காரச் சட்னி, இஞ்சி சட்னி, மிளகாய் சட்னி, வெங்காய சட்னி போன்றவை இருந்தால் அட்டகாசமாக இருக்கும். நீங்களும் வீட்டில் இதே மாதிரி பீட்ரூட் இருந்தால் சட்டுனு செஞ்சு பாருங்க, எல்லோரும் விரும்பி உண்பார்கள். தட்டு நிறைய கொடுத்தாலும் சாப்பிட்டுகிட்டே இருப்பார்கள்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,02,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

புதிய தொழில் தொடங்கணுமா?

அனைத்து தொழில் ஆதரவுகளும் வேணுமா?

மதி சிறகுகள் தொழில் மையம் (MSTM) வாருங்கள்!

உங்களுக்கான அனைத்து தொழில் ஆதரவுகள் மற்றும் இ-சேவை மைய சேவைகளைப் பெற்றுப் பயனடையுங்கள்.

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையில் உள்ள MSTM மையத்தை அணுகுங்கள்.

மேலும் விவரங்களுக்கு அழைக்கவும்:

1800 599 1600

மதி சிறகுகள் தொழில் மையத்தில் வழங்கப்படும் சேவைகள்

1. தொழில் யோசனை மற்றும் கருவாக்கம் செய்தல்
2. தொழில் திட்டம் தயாரித்தல்
3. தொழில் தொடங்க ஆதரவு வழங்கல்
4. தொழில் நிதிக்கு விண்ணப்பித்தல்
5. தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பம் பெற வழிச் செய்தல்
6. சட்ட இணக்கங்களுக்கு வழிகாட்டல்
7. தொழில் வல்லுநர்களின் ஆலோசனைகள் வழங்குதல்
8. சந்தை வல்லுநர்களின் ஆலோசனைகள் வழங்குதல்
9. சந்தை இணைப்புகள் உருவாக்கல்
10. தொழில் நடைமுறைகளுக்கான கூட்டிணைப்பு
11. துறை வாரியான தொழில்நுட்பங்களை அணுகல்
12. PAN அட்டை உருவாக்கல்
13. GST தாக்கல் செய்தல்
14. FSSAI சான்று பெறுதல்
15. UDYAM பதிவு செய்தல்
16. இணைய வழி இணக்கங்கள் உருவாக்கல்
17. உரிமங்களைப் பெற்றுத் தருதல்
18. சான்றுகளைப் பெற்றுத் தருதல்
19. நிறுவன தணிக்கை
20. வருமான வரி தாக்கல்
21. நிறுவன கணக்குப் பராமரித்தல் (Accounting)

இ-சேவை மைய சேவைகளும் வழங்கப்படுகின்றன

1. விண்ணப்பங்கள் பெறுதல்
2. அரசு சான்றுகள் பெறுதல்
3. அரசு உரிமங்கள் பெறுதல்
4. நலத்திட்ட உதவிகள் பெறுதல்
5. காப்பீடுகள் பெறுதல்
6. நிறுவன/சேவைப் பதிவுகள்
7. வரி செலுத்துதல்
8. ஓய்வூதியம் பெறுதல்
9. பதிவிறக்கம் செய்தல்
10. சேவைப் பதிவுகள்
11. புகார் (ம) திருத்தங்கள்
12. இதர சேவைகள்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th November 2024 Posted at Patrika Channel, Egmore.

நேரத்தை வீணாக்காதீர்கள்,

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

உங்களால் முடியும்!
சாதித்துக் கொண்டே இருங்கள்!!

"தெருவோரம் சட்டிப்பானை வித்த காலம் மாறி
இப்ப ஷாப்பிங் மால்லயும் Online -லயும் வித்துக்கிட்டிருக்கோம்.
இந்த மாற்றத்திற்கு காரணம்
எங்கள் குழு தந்த தன்னம்பிக்கையும் துணிச்சலும்தான்."

எப்பொழுது நீங்கள் மற்றவருக்கு உதாரணமாக திகழ்கிறீர்களோ
அப்போது தான் தன்னம்பிக்கை உடைய வெற்றியாளராக ஆகிறீர்கள்

மேலும் விவரங்களுக்கு
வாழ்வாதார உதவி அழைப்பு எண்
155 330 ல் தொடர்பு கொள்ளவும்